# தேவனுடைய பண்புகள் என்ன?

### அவருடைய அன்பு

பரிசுத்த ஆவியானவர் மூலமாகக் கிறிஸ்தவர்களின் இருதயங்களில் தேவனுடைய அன்பானது அதன் அகலம், நீளம், ஆழம் மற்றும் உயரத்தில் ஊற்றப்படும் பொழுது, அது தேவனுடைய முழுமையைப் பற்றிய ஒரு உணர்ந்தறிதலைக் கொண்டு வருகின்றது (ரோமர் 5:5; எபே. 3:18, 19). மிக அதிகமாய் ஊடுருவக்கூடிய மனதினால் அறியக்கூடிய சிந்தனை எதையும் தாண்டி, அவரது அன்பானது மனித அறிவைக் கடந்து நிற்பதாக உள்ளது. அவரது அன்பைப் பாராட்டுவதில் சில விளக்கங்கள் நமக்கு உதவுகின்றன.

### விலங்குகளின் மீதான நமது அன்பைப் போன்றது

"நீதிமான் தன் மிருக ஜீவனைக் காப்பாற்றுகிறான்; துன்மார்க்கருடைய இரக்கமும் கொடுமையே" (நீதி. 12:10). நீதிமானான ஒரு மனிதர் தனது விலங்குகளைக் காப்பாற்றுகின்றார்; அவைகளை இளைப்பாறச் செய்கின்றார், அவைகளுக்கு உணவும் நீரும் அளிக்கின்றார், எந்த வசதிக் குறைவும் ஏற்படாத வண்ணம் கவனித்துக் கொள்ளுகின்றார். ஒரு பறவை, ஒரு நாய், ஒரு பூனை, ஒரு குதிரை அல்லது ஒரு காளைமாடு ஆகியவற்றைச் சொந்தமாய்க் கொண்டுள்ள ஒருவருக்கு இது உண்மையாக உள்ளது. விலங்குகளைப் பற்றி ஒரு மனிதர் தனது இருதயத்தில் உணருகின்ற அக்கறையானது, மனிதர்களைப்பற்றி தேவன் உணருதலைப் போன்றதாக உள்ளது.

குதிரை அல்லது (கோவேறுக்) கழுதையை வசப்படுத்த "வாரினாலும் கடிவாளத்தினாலும் கட்டப்"(சங். 32:9)படும் வழியுண்டு. தேவன் மனிதர்கள் மீது இவ்விதமான சரீரத் துன்புறுத்தலை (கயிறு அல்லது வார்கள்) பயன் படுத்துவதில்லை, ஆனால் "அன்பின் கயிறுகளை"(ஓசி. 11:4)ப் பயன்படுத்துகின்றார். தேவனுடைய தயவானது (ரோமர் 2:4), குதிரையின் கடிவாளம் போல தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கு மனிதர்களை வழி நடத்த வேண்டும். கிறிஸ்துவின் அன்பானது (2 கொரி. 5:14), ஒரு காளையின் நுகத்தடி போல, மனிதர்களைத் தங்கள் எஜமானருக்காக வாழும்படி கட்டுப் படுத்த வேண்டும்.

தேவனுடைய அன்பானது, "இரக்கமுள்ள எஜமானாயிருந்து தங்களது காளைகளின் மேலுள்ள நுகத்தடியை நீக்கிப் போட்டு, [அதாவது, அவர்கள்] அதைப் பின் தள்ளி விட்டுத் தங்கள் விலங்குகள் உணவு உண்ணும்படியும்,

ஆறுதலடையும்படியும் செய்கின்ற'' விலங்கின் உரிமையாளருடைய உணர்வுக்கு ஒப்பாயிருக்கின்றது.[1] தேவன், "... அவர்கள் கழுத்துகளின்மேல் இருந்த நுகத்தடியை எடுத்துப் போடுகிறவரைப்போல் இருந்து, அவர்கள் பட்சம் சாய்ந்து, அவர்களுக்கு ஆகாரங்கொடுத்தேன்" (ஓசி. 11:4) என்று கூறினார்.

## குழந்தைகளின் மீதான நமது அன்பைப் போன்றது.

ஒரு தகப்பன் தனது சொந்த குழந்தைகளின்மீது அக்கறையும் பொறுப்பையும் உணர வேண்டும் என்பது உலகளவில் அறியப்பட்டுள்ளது. ஒரு காலகட்டத்தில் மோசே, தனது பொறுமையானது தீர்ந்துபோன நிலையில், தான் இஸ்ரவேலருக்குத் தகப்பனாயிராதபடியால், அவர்கள்மீது தான் கொள்ளும் கவனிப்பானது ஒரு தகப்பனுடையதைப் போலிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட முடியாது என்று வாதிட்டார். அவர், "இவர்களுடைய பிதாக்களுக்கு நான் ஆணையிட்டுக் கொடுத்த தேசத்துக்கு நீ இவர்களை முலையுண்கிற பாலகனைத் தன் தகப்பன் சுமந்துகொண்டு போவதுபோல, உன் மார்பிலே அணைத்துக்கொண்டுபோ என்று நீர் என்னோடே சொல்லும்படி, இந்த ஜனங்களையெல்லாம் கர்ப்பந் தரித்தேனோ? இவர்களைப் பெற்றது நானோ?'' (எண். 11:12) என்று சொன்னார். இதற்கு மறுபுறத்தில், பவுல் தாம் மனம் மாற்றியவர்களின்மீது கொண்டிருந்த அன்பானது ஒரு தகப்பனுடைய கரிசனையைப் போல் இருந்தது. ''உங்களிடத்தில் பட்சமாய் நடந்து கொண்டோம்; பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறது போல, நாங்கள் உங்கள்மேல் வாஞ்சையாயிருந்து ... தகப்பன் தன் பிள்ளை களுக்குச் சொல்லுகிறதுபோல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும் தேறுதலும் எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள்'' (1 தெச. 2:7-11).

தேவன் இஸ்ரவேலின்மேல் தாம் கொண்ட அன்பைச் சித்தரிப்பதற்கு பிதாத்துவத்தின் விளக்கத்தைப் பயன்படுத்தினார். ''இஸ்ரவேல் இளைஞனாயிருந்தபோது நான் அவனை நேசித்தேன்; எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்'' (ஓசி. 11:1). இருப்பினும், அவருடைய அன்பு கைம்மாறு செய்யப்படாததாக இருந்தது. தேவனுடைய தீர்க்கதரிசிகள் இஸ்ரவேலைத் தேவனுடைய தூய்மையான அன்பை நோக்கித் தொடர்ந்து அழைத்தனர்; அதற்குப் பதிலாக, மக்கள் "... பாகால்களுக்குப் பலியிட்டு, விக்கிரகங்களுக்குத் தூபங்காட்டினார்கள்" (ஓசி. 11:2). தேவன் ஒரு நல்ல தகப்பனாய் இருந்தார் என்ற உண்மை நிலையிலும் அவர்கள் இவ்வாறு செய்தனர்: ''நான் எப்பிராயீமைக் கைப்பிடித்து நடக்கப் பழக்கினேன்; ஆனாலும் நான் தங்களைக் குணமாக்கு கிறவரென்று அறியாமற்போனார்கள்'' (ஓசி. 11:3). அவர்களின் பாவம் நிறைந்த சுயநலமானது தேவன் அவர்களுடைய ஒவ்வொரு தேவையையும் கவனித்துக் கொண்டிருந்தார் என்ற உண்மையைப் பார்வைக்கு மறைத்து விட்டிருந்தது. அவர், "... நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப் பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்"

(யாத். 15:26) என்று வாக்குத்தத்தம் செய்திருந்தார். தேவன் இஸ்ரவேலரிடத்தில் காண்பித்திருந்த அன்பை அவர்கள் உணரத் தவறினர்: "... ஒரு மனிதன் தன் பிள்ளையைச் சுமந்து கொண்டு போவது போல, நீங்கள் இவ்விடத்திற்கு வருகிற வரைக்கும், நடந்து வந்த வழிகள் எல்லாவற்றிலும், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சுமந்து கொண்டு வந்ததை ..." (உபா. 1:31). அவர் நம்மேல் கொண்டுள்ள அன்பை நாம் காணத் தவறாதிருப்போமாக (1 யோவா. 3:1ஐக் காணவும்).

## அவருடைய இரக்கம்

யாக்கோபு 5:11 வசனமானது, "... கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே" என்று கூறுகின்றது.

முதல் கொலைகாரன் இரக்கத்திற்காகக் கதறியழுத வேளையிலும், உருக்கம் மிக்கவர் அவனது வேண்டுகோளைக் கேட்டு, அவனுடைய பாதுகாப்பிற்காக அவன்மேல் ஒரு அடையாளத்தையிட்டார் (ஆதி. 4:15). தேவன் ஒருபோதும் தண்டிக்க விரும்புவதில்லை; அவர் எப்பொழுதுமே ஆசீர்வதிக்கவே விரும்புகின்றார்.

> துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ? அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் ... மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்; சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் (எசே. 18:23-32).

2 நாளா. 30ல், எப்பிராயீம், மனாசே, இசக்கார் மற்றும் செபுலோன் மனிதர்கள் இரண்டாம் மாதத்தில் கூட பஸ்காவை உண்ணத் தங்களைத் தயார் செய்து கொள்ளாத பொழுது, எசேக்கியா அவர்களுக்காக ஜெபித்தார்: "... தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரான தேவனைத் தேடும்படிக்கு, தங்கள் இருதயத்தை நேராக்கினவர்கள் பரிசுத்த ஸ்தலத்திற்கேற்ற சுத்தாங்கம் அடையாதிருந்தாலும், கிருபையுள்ள கர்த்தர் அவர்கள் எல்லாருக்கும் மன்னிப்பாராக" (வ. 18, 19). வசனம் 20ல், நாம், "கர்த்தர் எசேக்கியாவின் விண்ணப்பத்தைக் கேட்டு, ஜனங்களுக்கு அநுகூலஞ்செய்தார்" என்று வாசிக்கின்றோம்.

தேவனுடைய மென்மையான இரக்கம் பற்றிய அழகிய மற்றும் ஆறுதலான போதனையானது துரதிர்ஷ்டவசமாகத் தவறாகப் பயன் படுத்தப்படுகின்றது. பலர், "அவர் அன்புகூருகின்ற மாதிரி அன்புகூரும் எந்த தேவனும், எவரொருவரையும் - அவர் எவ்வளவுதான் பொல்லாதவரா யிருப்பினும் - என்றென்றும் தீக்கிரையாக்க முடியாது!" என்று கூறியுள்ளனர். உண்மையில் தேவனுடைய இரக்கத்திற்கு எல்லையொன்று உள்ளது என்பதை நாம் உணர்ந்தறிய வேண்டும். நாம் 2 பேதுரு 3ல், "பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு

வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்து" (வ. 4) என்று வாசிக்கின்றோம். அவர் பூர்வ உலகத்தையும் தப்ப விடவில்லை (வ. 5), ஆனால் தேவபக்தியற்ற அந்த உலகத்தின் மேல் வெள்ளப் பெருக்கை வரச் செய்தார். அதைச் செய்வது அவருக்கு வருத்தத்தை ஏற்படுத்தியது, ஆயினும் அது அவசியமாய் இருந்தது.

தேவன், சோதோம் கொமோரா நகரங்களைச் சாம்பலாக்கினார் (வ. 6). அவர் அதைச் செய்ய விரும்பினாரா? அவரிடத்தில் ஆபிரகாம், "ஐம்பது நீதிமான்கள் இருந்தால் நீர் அவர்களை (சோதோம் கொமோரா நகரத்தார்களை) விட்டுவிடுவீரா?'' ''ஆம்'' ''நாற்பத்தி ஐந்து பேர் இருந்தால் ...?" "ஆம்?" "நாற்பது பேருக்கு ... முப்பது ... பத்துப்பேர் நிமித்தம்?" "ஆம்" என்று வேண்டுகோள் விடுத்தபோது தேவன் துடிக்கும் ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருந்தார். அந்த (குறைந்த அளவு) எண்ணிக்கை (கொண்ட நீதிமான்கள் கூட) காணப்பட முடியாதிருந்தது. வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் இறங்கி வந்தது, அழிவின் காட்சியானது பெரிய உலைக்களம் போல் இருந்தது.

தேவன் எவரொருவரையும் ஒருக்காலும் நரகத்திற்கு அனுப்பிய தில்லை; அங்கு போகின்றவர்கள் தாங்களாகவே அங்கு போகின்றனர். அங்கு செல்வதிலிருந்து எவரொருவரையும் தடை செய்வதற்குத் தேவன் தம்முடைய பங்குப் பணியை செய்துள்ளார், மற்றும் செய்து கொண்டிருக் கிறார். அவர் தம்முடைய ஒரே பேறான குமாரனையே ஒப்புக்கொடுக்கு மளவுக்குப் பொல்லாங்கான மனித இனத்தைப் போதுமான அளவு அன்புகூர்ந்தார் (யோவா. 3:16).

இல்லை, நரகத்தின் இருப்பானது தேவனுடைய பரிதவிப்பு மற்றும் மென்மையான இரக்கம் ஆகியவற்றிற்கு எதிராக வாதிடுவதில்லை. அது தெய்வீக உருக்கத்தை வெறுத்து ஒதுக்கும் மனிதரின் நன்றியின்மை மற்றும் வெறுப்புக்கும், அவர்கள் இரட்சிக்கப்படாமல் போவதற்கும் சாட்சிய மாகவே உள்ளது.

## அவருடைய சாந்த குணம்

"ஒருவனையும் தூஷியாமலும், சண்டை பண்ணாமலும், பொறுமை யுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும் சாந்த குணத்தைக் காண்பிக்கவும் ..." (தீத்து 3:2) என்று கிறிஸ்தவர்களுக்குக் கூறப்பட்டுள்ளது.

சாந்த குணம் என்று அழைக்கப்படும் பண்பானது எல்லா நல்ல மனிதர்களாலும் மற்றும் தேவனாலும் பாராட்டப்படுகின்றது. இதற்கு எதிர்க் குணமான முரட்டுத் தனம் என்பது ஆவியின் கனியை வெளிப்படுத்து வோரிடத்தில் இடம் பெறுவதில்லை. ஒரு மனிதர் சாந்தமானவர் என்று விவரிக்கப் படுகையில் மாண்புமிக்க பல பண்பியல்புகள் காட்சிப்படுத்தப் படுகின்றன: நாணயம், ஞானம், தாராளகுணம், வீரம் மற்றும் அன்பு ஆகியவை உள்ளடக்கப்படலாம். சிந்தனை நிறைந்த தன்மை மற்றும் கருத்துக் கொள்ளுதல் ஆகியவையும் சாந்த குணத்தின் பாகங்களாகவே உள்ளன.

*கிறிஸ்தவர்கள் சாந்த குணத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும், ஏனென்றால் அது நமது பிதாவாகிய தேவனுடைய பண்பாக உள்ளது. நம்மைச் சிருஷ்டித்த அவருக்கு நாம் எவ்வளவு கடன் பட்டுள்ளோம் என்பதையும், நாம் எவ்வளவு பாவம் நிறைந்தவர்களாய் இருக்கின்றோம் என்பதையும் நாம் உணர்ந்தறியும் பொழுது, நாம் எல்லா மக்களிடத்திலும் சாந்த குணம் உடையவர்களாய் மாற வேண்டும். தாவீது தமது முன்னேற்றத்தை தேவனுடைய சாந்த குணத்தினால் உண்டானதென்று கூறுகின்றார், "... உம்முடைய காருணியம் என்னைப் பெரியவனாக்கும்" (சங். 18:35).*

*தேவன் காயீனிடத்தில் கேள்வி கேட்டபொழுது அவர் சாந்த குணம் நிறைந்தவராகக் காட்டப்படுகின்றார்: "... உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று? உன் முகநாடி ஏன் வேறுபட்டது? நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ? ... பாவம் உன் வாசற்படியில் படுத்திருக்கும் ... நீ அவனை ஆண்டுகொள்ளுவாய்" (ஆதி. 4:6, 7).*

*நமது தேவனுடைய விருப்பத்தின்படி நாம் அதிகம் அன்புள்ளவர்களாக, இரக்கம் நிறைந்தவர்களாக மற்றும் சாந்தமுள்ளவர்களாக ஆகும்படியாக நாம் ஜெபிப்போமாக.*

---

*குறிப்பு*

[1]C. F. Keil and F. Delitzsch, *Commentaries on the Old Testament*, vol. X, *Minor Prophets* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., n.d.), 138.